★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

டச்சு முதலாளிகள் இந்தியாவில் ரூ. 4 கோடி முதலீடு செய்வராம்!

பம்பாய், மார்ச் 1—

நெதர்லாந்து தொழிலதிபர்கள், இந்தியாவில் இந்த ஆண்டில் சுமார் ரூ. 4 கோடிவரை மூலதனமிட்டுத் தொழில்கள் துவக்கக்கூடும் எனத் தெரியவருகிறது.

இந்திய நிறுவனங்கள் சில அந்த நாட்டு முதலாளிகளுடன் இதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மலர் 3] சென்னை: மாசி 19உ வெள்ளி (2—3—56) ★ ★ வெளியீடு: மாசி 20உ சனி (3—3—56) [இதழ் 222

இரு மொழி மாகாண இணைப்புக்கு காமராசர் ஆதரவு

அடிப்படை உண்மையை மக்கள் உணர்ந்துகொள்ளவில்லையாம்

அதற்காக அவர் ஆயாசப்படுகிறார்!

அறியாமையை அகற்றும் ஆசிரியர் ஆகிறார்!

தட்சிணப் பிரதேச கருத்துக்கு ஆதரவு திரட்டக் காமராசர் கிளம்பிவிட்டார்

"மக்கள் விஷய விளக்கம் பெற்றும், நேரடியாகப் பங்கு பெற்றும் நாட்டு நிர்வாகம் சிறப்புற நடைபெறும் என்ற பெரும் நோக்குடன் மொழி வழி அமைப்பை காங்கிரஸ் தீவிரமாகக் கோரி வந்தது.

"இந்நாட்டு மக்களுக்கிடையே சகிப்புத் தன்மையையும், சகோதரவாஞ்சையையும் தெளிவாக நிலைபெறச் செய்யும் ஒரே நோக்குடன் இரு மொழி—பல மொழி அமைப்புகளை, இப்பொழுது காங்கிரஸ் கோருகிறது.

"மாகாண இணைப்புக் கருத்து, மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கவேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டு எழுந்ததாகும்."

—இவ்வாறு முதலமைச்சர் காமராசர், தட்சிணப் பிரதேச ஏற்பாட்டிற்கு விளக்கம் தந்திருக்கிறார்.

சைதை ஆசிரியர் கல்லூரி நூற்றாண்டு விழாவைத் துவக்கிவைத்த நேரத்தில், முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதுபற்றியே அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"மொழிவழி மாகாண அமைப்பைத் தொடர்ந்து கோரிவந்த காங்கிரஸ், இப்பொழுது இரு மொழி—பன்மொழி மாகாண ஏற்பாடுகளை ஏன் கோருகிறது என்பதை அறிந்துகொள்ள முடியாது பலர் இருக்கிறார்கள். இது நியாயமான சந்தேகமாகும். இது விளக்கப்படவேண்டும்.

"இணைக்கப்படும் ஒரு மாகாணம், இணைந்துள்ள மற்றொரு மாகாணத்தின் வசதிகளைப் பெற்று நலமடைய வாய்ப்பளிக்கும் கருத்துடன், இணைப்பு அமைப்புகோரப்படவில்லை. இணைப்பினால் இலாபமேற்படும் என்ற பேச்சு இணைப்பில் சேர்ந்துள்ள மாகாணங்களுக்குள் சச்சரவை மூட்டும்.

"ஒன்பது ஆண்டுகளுக்கு முன் நாட்டை இரு கூறுகளாக்க ஒப்புக்கொண்டவர்களும், அண்மையில் ஆந்திரப் பிரிவினைக்கு இசைந்தவர்களும் எவரோ அவர்கள்தான் இப்பொழுது நாட்டை மொழிவழியில் பிரிப்பதை எதிர்க்கின்றார்கள்.

"இவைகளையும் மற்ற நியாயங்களையும் மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டும். இதைச் செய்வதற்கு ஆசிரியர்களே தகுதி வாய்ந்தவர்களாவர்."

மகிழ்ச்சியற்ற உறவு!

"மத்திய அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கத்திற்கும் பண விவகாரத்தில் இருந்து வரும் உறவு மகிழ்ச்சி தரக்கூடியதாக இல்லை. பெரும் உதவிபெற மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் தீவிரமாக வலியுறுத்த வேண்டும்."

இவ்வாறு, சென்னை மேல் (சட்ட) சபையில் டாக்டர் வி. கே. ஜான் கூறினர்.

'தட்சிணப் பிரதேசக் கருத்தை தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை'

'பிப். 20-ந் தேதிய அர்த்தால் அதை விளக்கிவிட்டது'

'முதலில் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும்'

சென்னை சட்டசபையில் டி. சண்முகம் முழக்கம்

சென்னை, மார்ச் 1—

"தட்சிணப் பிரதேசம் பற்றி முதலமைச்சரும், நிதி அமைச்சரும் மாறுபட்ட கருத்தை அறிவித்திருக்கிறார்கள். முதலில் மொழிவழி மாநிலங்கள் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். அதன் பிறகு, தெற்கு மாநிலங்கள் விரும்பினால், அவைகள் 'திராவிட நாடு' என்ற பெயரில் கூட்டாக இணைவதைக் குறித்து யோசிக்கலாம்.

"இத்துறையில், இருபதாந் தேதி மாநிலம் முழுதும் நடைபெற்ற அர்த்தால், பொதுமக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்,"

என்று, சட்டசபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய திரு டி. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்.

இங்கிலையில், நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறுக்கிட்டு, 'அதுதான் குறிப்பான விஷயமாகும். பொது மக்கள் கருத்தை எவ்வாறு அறிவது என்பதுதான் கேள்வியாகும்?' என்று வினவினர்.

தோழர் டி. சண்முகம் மேலும் சொன்னர் :—

"குக்கலின் வாலை நோக்கு வது போன்றே அரசாங்கம் மதுவிலக்கை அமுல் நடத்துவதும் இருந்துவருகிறது.

"சர்க்கரையின் விலை ஏற்கனவே கூடுதலாக இருக்கிறது. வரி விதிப்புக்குப் பிறகு சர்க்கரை கிடைப்பதே கஷ்டமாகி விட்டது."

பனைத் தயாரிப்புப் பொருள்களின் ஏற்றுமதிகளின் மூலம் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் ரூ 90 இலட்சம் கிடைக்கிறது.

'தென்னாடு தொழில் மயமாக்கப்பட வேண்டும்'

'இரண்டாம் திட்டத்தைத் திருத்த சென்னை அரசாங்கம் முயற்சிக்கட்டும்'

"தென்னாட்டைத் தொழில் மயமாக்காததற்காக மத்திய அரசாங்கத்தை நிதி அமைச்சர் 'கண்டித்'ததற்காக நான் மகிழ்கிறேன்."

("எனது நிலைமை விளக்கத்தைக் 'கண்டித்த'தாகக் கொள்ளக்கூடாது" என்று நிதி அமைச்சர் இடைமறித்துக் கூறினர்.)

"சில பெருந் தொழில்கள் தென்னாட்டில் நிறுவப்பட வேண்டுமென்ற நிதியமைச்சரின் கோரிக்கைக்கு இந்தச் சபை உறுப்பினர்கள் பின்பலமாக இருப்பர். தென்னாட்டில் சில பெருந்தொழில்கள் நிர்மாணிக்கப்படும் வகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்துமாறு இந்த அரசாங்கம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

'வடக்குக்கு எதிராக நாங்கள் முழக்கமிடக் கூடாது என இந்திய அரசாங்கம் விரும்பும் பட்சத்தில், தென்னாடும் தொழில் மயமாக்கப்பட வேண்டும்."

இவ்வாறு சென்னை சட்டசபையில் ராஜா-சர் முத்தையா குறிப்பிட்டார்.

இந்தியாவில் சோப்பு உற்பத்தி, 1955-ல் மொத்தம் 94,000 டன்னாக இருந்தது; அது 1954-ம் ஆண்டின் உற்பத்தியைக் காட்டிலும் 6,000 டன் அதிகமாகும்.

'புயல் நிவாரணத்திற்கு கூடுதலாகப் பணம் ஒதுக்கி இருக்க வேண்டும்'

'மலாயா தமிழ் மக்களின் பேருதவி கருதத்தக்கது'

'வடநாட்டு மக்களின் போக்கு வருந்தத்தக்கது'

சட்டசபையில் எம். பி. சுப்பிரமணியம் கருத்துரை

சென்னை, மார்ச் 1—

"தெற்கு மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்துத் தரவேண்டிய வசதிகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அதற்காக மேலும் கூடுதலான தொகையை அரசாங்கம் ஒதுக்கியிருக்கவேண்டும். பீகாரிலும், மற்ற வடநாட்டிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களுக்கு, தென்னாட்டு மக்கள் உடனடியாகப் பெரும் உதவி செய்தார்கள். ஆனால் அத்தகைய உதவி தென்னாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடநாட்டு மக்களிடமிருந்து கிடைக்கவில்லை. இது வருந்தத்தக்கதாகும்.

"எங்கோ தொலைவில் உள்ள மலாயாவில் வாழும் தமிழ் மக்களிடமிருந்து புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க மூன்று இலட்ச ரூபாய் அனுப்பி உதவியது குறிப்பிடத்தக்கது—கருதத்தக்கது."

என்று, சட்டசபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது பேசுகையில், திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்.

நங்கல் உர உற்பத்தி தொழிற்சாலை

ரூ. 30 கோடி மூலதனத்துடன் தனிப்பட்ட நிறுவனம் மேற்கொள்ளுகிறது

புதுடில்லி, மார்ச். 1—

இந்தியப் பேரரசின் நிர்வாகத்திலிருக்கும் நங்கல் உர உற்பத்தித் தொழிற்சாலை, 'கனநீர்' உற்பத்தி நிலையம் இவற்றைத் தனிப்பட்ட நிறுவனம் ஒன்று மேற்கொள்ளும் என்றும் அதற்காக அந்த நிறுவனம் பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றும், நிறுவனத்தின் அங்கீகாரம் செய்யப்பட்ட மூலதனம் ரூ. 30 கோடியாக இருக்கும் என்றும் தெரியவருகிறது.

இந்தத் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 'அம்மோனியம் நைட்ரேட்' ரூபத்தில் 70,000 டன் 'நைட்ரஜனு'ம், 7 முதல் 8 டன் வரை 'கன நீரு'ம் உற்பத்தி செய்யப்படும் என்று தெரியவருகிறது.

நடவடிக்கை எடுக்கப் போகிறார்களாம்!

சென்னை, மார்ச் 2—

"'ஆட்டோ ரிக்ஷா'வை ஓட்டுபவர்கள், 'மைல் கணக்கை'த் தப்பிதமாகக் காட்டுவது போன்ற குறைபாடுள்ள மீட்டர்களைப் பயன்படுத்திப் பொதுமக்களை ஏமாற்றுவதைத் தடுக்க சர்க்கார் திறமையான நடவடிக்கை எடுக்கும்,"

என்று, சென்னை போக்குவரத்து அமைச்சர் பி. பரமேசுவரன் சென்னை மேல்சபையில் உறுதியளித்தாராம்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் | ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 2-3-'56 வெள்ளி

தமிழர் தலைவர்

பலர் கூட்டாக இணைந்து செயல்படுவதற்கு, இன்றியமையாத் தேவையாக இருப்பது அருந்திறம் படைத்தத் தலைமையாகும். அறிவும், செயல் திறமும் இருந்துவிட்டால் மட்டுமே தலைமை நிறைவுபெற்றதாக இருந்துவிட முடியாது.

கூட்டுத் தோழர்களோ பலப்பலர். இயல்போ ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு. மூலக் கொள்கையிலே அவர்கள் அனைவரிடையும் ஒருமைப்பாடு உறுதியுடையதாக இருந்தாலும் நடைமுறைகளில் கருத்து மாறுபாடு இருப்பது எதிர்பார்க்கக் கூடியதே. அதன் பலனாகத் தனி நபர்களின் பிணக்கும் பூசலும் தலைகாட்டுவது இயல்பேயாகும்.

கருத்து வேற்றுமையின் காரணமாகத் தோன்றும் சிறு பிணக்கு, நேர்மையான முறைகொண்டு தீர்த்துவைக்கப்படாவிட்டால், இறுதியில் பெரும் பிளவில் வந்து முடிவதும் உண்டு. அத்தகு விரும்பத்தகாத நிலைக்கு இடங்கொடாது கருத்து வேற்றுமைத் தோன்றிய நேரத்திலேயே அதைக் களைந்தெறிந்து, சிறு பிணக்கிற்கும் வாய்ப்பளிக்காது, குறிக்கோளில் வெற்றி காணும் வரை அக்கூட்டத்தை நல்வழியில் செலுத்துவதில் எவர் வெற்றி காணுகிறார்களோ, அவர்கள்தான் தலைமைக்கு முழுதும் தகுதி பெற்றிருப்பவர்களாவர்.

தலைமைக்கு வரைகடந்தப் பொறுமையும் வேண்டும்; குற்றங் கண்ட இடத்து சினங் காட்டாது நயமாக இடித்துரைத்துத் திருத்தம் செய்யும் தன்மையும் வேண்டும்; மற்றவர் சீறும் காலை சிரித்துக் கொண்டு கருமமாற்றும் நெஞ்சுரமும் வேண்டும்.

தமிழருக்குத் தலைவர் இல்லை என்றுதான் எவரும் கூறுவர். அந்த இருளில்தான் தமிழ்நாடு இருக்கவும் இருந்தது.

அந்த இருளை சர்வ கட்சி கூட்டணி விரட்டிவிட்டது. தலைவரில்லா நிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதை மெய்ப்பித்தாகிவிட்டது.

குறிப்பிட்ட ஒரு கருமத்தை மேற்கொள்ளும் ஒரு சிறு கூட்டத்தை நடத்திச் செல்வதற்கே திறமைமிக்கத் தலைவர் தேவைப்படுகிறது எனும்பொழுது, அரசியல் கட்சிகள் சிலவற்றை, அதிலும் ஒன்றோடு ஒன்று முரண்படும் குறிக்கோள்களைக் கொண்டு பிணங்கிக் கிடந்த அரசியல் கட்சிகளை, ஒரு அணியில் பிணைத்து செவ்வனே செயல்படுத்துவது என்பது நினைப்பதற்கே அச்சம் தரும் செய்தியாகும். மிரட்சி தரும் அப்பெரும் பொறுப்பை ஏற்றதுடன், எதிரிகளும் அதிர்ச்சியடையும் வகையில், முழு அளவில் வெற்றியும் பெற்றிருக்கிறார் தமிழர்களின் இருதயபூர்வ அன்பிற்குப் பாத்திரமான தமிழ்த் தலைவர் பொன்னம்பல தியாகராசன் என்பது மிகையாகாது.

தலைவருக்குரிய தகுதி அவருக்கு ஏற்கனவே உண்டு. சென்ற காலத்துத் தமிழ் நாட்டு அரசியலை அறிந்திருப்பவர்கள் அவ்வுண்மையை நன்கு அறிவர்.

அந்தக் காலத்திலும் ‘அரசியல் அவசரம்’ அவர் அறியார். இந்தக் காலத்திலும் அதில் அவருக்குப் பழக்கமில்லாததில் வியப்பில்லை.

பிறர் கண்களையும் கருத்தையும் ஈர்க்கும் வகையில் அவர் அந்தக் காலத்திலும் அரசியல் துறையில் ‘சலசலப்பு’ காட்டியது கிடையாது. இன்றும் அதே நிலைதான். இருந்தாலும், இரண்டு காலத்திலும் அவர் தகுதி ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்தது—இருக்கிறது.

எதிலும் புரட்சி, எங்கும் புரட்சி என்றக் கோட்பாட்டினருக்கும் அவர் தலைமையில் பணியாற்ற அருவையைத் தட்டவில்லை. மற்றவர்கள் அவர் தலைமையை மனமுவந்து ஒப்புக்கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

கூட்டணியில் சேர்ந்த மற்றக் கட்சிகள் அனைத்தும், தமிழ் மக்களின் உரிமைக்குப் போராடியதைக் காட்டி அரசியலில் பயன்தேடும் என்று, அதை மட்டுமே வாழ்க்கை வழியாகக் கொண்டு இருக்கிறவர்கள் குறைகூறித் திரிகிறார்கள். ஆனால் அந்தக் குறையை தலைவர் மீது வீசுவதற்கு அவர்களேகூட அஞ்சுவார்கள். அதைக்காட்டி, குறை கூறுபவர்களைப் போல் புதிய வாழ்வு பெறவேண்டிய கட்டாயத்தில் கூட்டணித் தலைவர் இருக்கவில்லை. அவர் ஏற்கனவே தமிழரின் தன்னிகரற்ற தலைவராக இருந்துவருவதே காரணம்.

கூட்டணியின் தலைமைப் பதவியால், அவருக்குக் காதொடிந்த ஊசியளவும் பலனேற்படவில்லை. ஆனால் அவர் தலைமையால் கூட்டணிக்கு ஒரு பெருஞ் சிறப்பே ஏற்பட்டு இருக்கிறது.

அமைச்சராக ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், ஏகாதிபத்தியதாசர் என அவர் ஏசப்பட்டு இருக்கிறார். அந்தப் பழிச் சொல்லுக்கும் இழிமொழிக்கும் பலியான அதே பி.டி. இராசன் அவர்கள்தான், இன்று தமிழரின் தனிப் பெருந் தலைவராகக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பிலமர்ந்து, இந்தியப் பிரதமரை இறங்கிவரச் செய்திருக்கிறார். கால மாறுதலின் அற்புதமே அற்புதம்.

1936-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி முறியடிக்கப்பட்டு விட்டது. அந்தத் தேர்தலின்போது பி. டி. இராசன் அவர்கள் ‘நீதிக் கட்சியே அழிந்துபோனாலும் நான்ஒருவனாக மட்டுமே இருந்தாவது, கட்சியின் கொடியைத் தாழவிடாதுத் தாங்கிக்கொண்டு இருப்பேன்’ என்று சூளுரைத்தார். அன்று கூறிய சூளுரை வீண் போகவில்லை. சரியாக இருபதாண்டு கழித்து கூட்டணிக்குத் தலைமை தாங்கி, தமிழர்களின் உரிமையை வலியுறுத்தியதின் மூலம் வெற்றிக் கொடி நாட்டி சூளுரையை நிறைவேற்றி இருக்கிறார்.

அவர் பெற்றுள்ள அரசியல் பண்பில், அர்த்தாலுக்கும், மாணவர்கள் அரசியலில் நேரடியாகப் பங்கு கொள்வதற்கும் அறவே இடம் கிடையாது. அப்பண்பாட்டிலேயே புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது. தமிழ் மக்களின் உரிமை காப்பதில் அவருக்குள்ள அக்கறை, ஆர்வம் அவரை ஒரு புரட்சித் தலைவராக மாற்றி இருக்கிறது.

அவரும் இந்த நிலையிலிருந்துப் பின்வாங்கி விடக்கூடாது. நமது இதயபூர்வமான வேண்டுகோள் இதுவேயாகும்.

காமன்வெல்த்திலேயே இருக்குமாம் !

கராச்சி, பிப். 29—

நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டப்படி, பாகிஸ்தான், குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டாலும் இந்தியாவைப் போன்றே பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இருக்குமாம்.

நிறைவேறி விட்டது !

கராச்சி, பிப். 29—

பாகிஸ்தானை, இஸ்லாமியக் குடியரசு என்று பிரகடனம் செய்யும் அரசியல் மசோதாவை, பாகிஸ்தான் அரசியல் சபை நிறைவேற்றி விட்டது; அடுத்த 24 மணி நேரத்திற்குள் இம்மசோதாவுக்கு கவர்னர்—ஜெனரல் சம்மதம் அளிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளியேறினர் !

கராச்சி, பிப். 29—

பாகிஸ்தான் அ. நி. சபையில் கலந்துகொண்ட 38 கிழக்கு பாகிஸ்தான் உறுப்பினர்களில் 18 பேரும், மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு சுயேச்சை உறுப்பினரும் அரசியல் சட்ட மசோதாவின் மூன்றாவது வாசிப்பில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கூறி சுஹ்ரவர்த்தி தலைமையில் சபையைவிட்டு வெளியேறினர்.

ஜப்பானுக்கு இந்தியாவின் இரும்புக் கனி

பதிலுக்கு 75 எஞ்சின்கள்

புதுடில்லி, பிப். 28—

ஜப்பானுக்கு 20 இலட்சம் டன் இரும்புக் கனிப் பொருளை இந்தியா அனுப்புமென்றும், அதற்கு ஈடாக ஜப்பான் சுமார் ரூ. 38 இலட்சம் மதிப்புள்ள 75 எஞ்சின்களை அனுப்புவதுடன், இந்தியாவின் கிழக்குக் கடலோரத்தில் துறைமுகங்கள் அபிவிருத்திக்கும், புதிய இரயில் பாதைகள் அமைக்கவும் துணைபுரிய வேண்டுமென்கிற ஏற்பாட்டுக்கான பேச்சுவார்த்தை இன்னும் இறுதி உருவம் பெறவில்லை யென்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்தும், மேற்கு பாகிஸ்தானிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்தவர்களில், வறுமை நிலையில் உள்ள க்ஷயரோக நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சையளிப்பதற்காக, மத்திய சர்க்கார், நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் மொத்தம் 750 படுக்கைகளை ஒதுக்கியுள்ளனர்.

பௌத்த ஜெயந்தி விழாவில் கலந்துகொள்ளும் பிரயாணிகளின் நலன்களுக்காக, பௌத்த யாத்திரை இடங்களுக்குச் செல்லும் பாதைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, உத்தர பிரதேச சர்க்காருக்கு இந்திய சர்க்கார் இதுவரை மொத்தம் ரூ 62,95,000 வழங்கியுள்ளனர்.

இந்தியாவில் மில் துணி உற்பத்தி, 1954-ல் 499.77 கோடி கெஜமாக இருந்தது. 1955-ல் 504.64 கோடி கெஜமாகப் பெருகி விட்டது.

‘அரிசன மக்களுக்கு ‘அநீதி’கள் இழைக்கப்படும் வரையில்.....!’

‘இந்தியாவின் மக்களாட்சி முறைக் கொள்கை வெற்றி பெற இயலாது’

விவசாயக் கடன் வசதி தருவதில்கூட பாரபட்சம் காட்டப்படுகிறதாம்!

மத்திய அமைச்சர் பி. என். தத்தார் தரும் விளக்கம்

“நாட்டு மக்கள் தொகையில் சுமார் ஆறிலொரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் மற்ற வகுப்பினருக்குச் சமத்துவமான நிலைக்குக் கொண்டுவரப்படுவது வரையில் இந்தியாவின் மக்களாட்சி முறைக் கொள்கை வெற்றி பெறவே முடியாது.”

என்று, இந்திய உள்நாட்டுத்துறை அமைச்சர் திரு பி. என். தத்தார இந்தூரில் நடைபெற்ற அரிசன மக்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னார் :—

“சட்டப்படி தீண்டாமை ஒரு குற்றமாக ஆக்கப்பட்டிருக்கிறது; ஆனால், பல்வேறு மாகாணங்களிலிருந்து அண்மையில் கிடைத்துள்ள தகவல்களோ, நாடெங்கும்-குறிப்பாகக் கிராமப் பகுதியில் தீண்டாமை வழக்கத்திலிருந்து வருவதாகத் தெரிகிறது.

“அன்றியும், கிராம விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் செய்து தருவதில்கூட அரிசன மக்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டப்பட்டதாகத் தெரிகிறது அரிசன வகுப்பினரின் அமைப்புக்களுக்கு (ஸ்தாபனங்களுக்கு) மற்ற வகுப்பினர் உரிய மதிப்போ மரியாதையோ காட்டுவதில்லையென்று தக்க சான்றுகளுடன் பல புகார்கள் பாராளுமன்ற அரிசன உறுப்பினர்களுக்கு வந்துள்ளன.

“தீண்டாமையென்பது ஒரு சமுதாயப் பிரச்சினை; எனவே, இச் சமுதாயக் கொடுமையை ஒழிக்க சட்டம் மட்டும் போதாது. சாதி இந்துக்கள் அரிசன மக்களைத் தங்களுக்குச் சமத்துவமான முறையில் நடத்த முன்வர வேண்டியது மிக அவசியமாகும்.”

சாத்தூர், சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலைகள்

உற்பத்தியை நிறுத்திவிடும் ?

புதுடில்லி, பிப் 29—

“‘மார்க்கெட்டிங்’ நிலையங்கள் ஏற்படுத்தப்படாவிட்டால் உற்பத்தி செய்வதையே நிறுத்திவிடப் போவதாக, சென்னை மாநிலத்தில் சாத்தூரிலும், சிவகாசியிலும் உள்ள சுமார் 60 தீப்பெட்டி உற்பத்தி தொழிற்சாலைகள் அறிவித்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?”

என்று, மக்கள் சபையில், கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வர்த்தக - தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியதாவது :—

“சிவகாசியிலும், சாத்தூரிலும் உள்ள தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு ‘மார்க்கெட்’ வசதிக்கு ஒரு ‘ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி’ ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.”

மருத்துவமனை ஊழியர் கோரிக்கைகள்

சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

சென்னை, பிப். 29—

‘ஜெனரல் ஆஸ்பத்திரி’யில் உள்ள 2,500 சிப்பந்திகளும் ‘சின்னங்கள்’ அணிந்து தங்கள் குறைகளை முறையிட்டு வருகின்றனர்.

“அவர்களுடைய குறைகளையும், கோரிக்கைகளையும் நிர்வாக அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்; அவசியமேற்பட்டால் சுகாதார அமைச்சரும் சிப்பந்திகளைக் கலந்து பேசுவார்”

என்று, சென்னைசட்ட சபையில், கேள்வி நேரத்தின்போது, சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கோலாரில் மதுவிலக்கு ரத்து கிடையாதாம் !

பெங்களூர், பிப். 29—

‘கோலார் தங்கவயல பகுதியில அமுலிலிருக்கும் மதுவிலக்கை ரத்து செய்யப் போவதில்லை’ என்று, கலால் இலாகா அமைச்சர் மைசூர் சட்டசபையில கூறியுள்ளார்.

‘சர்க்கார் மதுவிலக்குக் கொள்கையிலிருந்து பின்வாங்கப்போவதில்லை.’ என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

சர்க்கார் ஊழியருக்கா தனித் தொகுதி?

அவசியமுமல்லவாம்—விரும்பத்தக்கதுமல்லவாம்!

சென்னை நிதி அமைச்சர் பதில்

சென்னை, பிப். 29—

“ஆசிரியர்கள், பட்டதாரிகள், கலைஞர்கள் ஆகியவர்களுக்கு மேல் சபையில் தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதுபோல், சர்க்கார் ஊழியர்க்கும் பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்ற சர்க்கார் கெஜட் பதிவில்லாத அதிகாரிகளின் (என். ஜி. ஓ.) மாநாட்டுக் கோரிக்கையை சர்க்கார் பரிசீலனை செய்தனர்; ‘அவர்களுக்கெனத் தனித் தொகுதி ஏற்படுத்துவது அவசியமுமல்ல — விரும்பத்தக்கதுமல்ல’ என்று ஆழ்ந்த யோசனைக்குப் பின்னர் சர்க்கார் முடிவு செய்துவிட்டனர்,”

என்று, சென்னை சட்ட சபையில், முன் விவாதத்தின்போது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

இந்திய சர்க்கார் விரும்பவில்லையாம் !

புதுடில்லி, பிப். 29—

“போர்ச்சுகீசியரிடமிருந்து விடுவிக்கப்பட்ட திட்டுப் பகுதிகளான நாகராவேலி, தாத்ராவை இந்தியாவுடன் இணைப்பதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கை எதையும் தற்போது மேற்கொள்ள இந்திய சர்க்கார் விரும்பவிலலை; கோவா பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியிருப்பதே இதற்குக் காரணமாகும்” என்று, மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார்.

ஜூலையில் தயாராகுமாம் !

அரசாங்க மொழிக் குழு, ஜூலை மாத இறுதிக்குள் தனது அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்து விடுமென்று தெரிகிறது.

உண்மைதானா ?

“சந்திர - சூரிய - நட்சத்திரக் கிரகங்களின போக்கை யொட்டி இந்திய சர்க்காரின கொள்கை உருவாக்கப்படுவதில்லை,”

என்று, பிரதமர் நேரு மக்கள் சபையில் கூறியுள்ளார்.

சல்லிபட்டி தோழர்கள் சிறைவாசம்

இரு. வாரத் தண்டனை ஏற்றனர்

சல்லிபட்டியிலும் சுற்றுப்புற ஊர்களிலும், கடைகள் முழுவதும் அடைக்கப்பட்டது; பள்ளிக்கு, மாணவர்கள் செல்லவில்லை; தொழிலாளர்கள் பணியாற்றச் செல்லவில்லை. மாலை, முத்தாலம்மன் திடலில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் ஏராளமான மக்கள் கலந்திருந்தனர். ஊர்வலம் 6-மணிக்கு முத்தாலம்மன் திடலை அடைந்தது இரா முத்துசாமியால், உறுதி மொழி வாசிக்கப்பட்டபின் கூட்டம் கலைக்கப்பட்டது

சல்லிபட்டியில் இருந்து சென்று உடுமலை அர்த்தாலில் கலந்து கொண்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு, சொந்த சாமீனில் அன்று இரவு $10\frac{1}{2}$ மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர். வழக்கு. இரண்டு வாய்தாக்களுக்குப் பின், 27-ந் தேதியன்று உடுமலை மாஜிஸ்திரேட் தோழர்களுக்கு 2 வார சிறைத் தண்டனை விதித்தார்

சிறை சென்ற தோழர்கள்:— இரா. முத்துசாமி, சி இராமநாதன், வேலுசாமி, ர. ராமசாமி, ர. கோவிந்தராசன், ர ராமசாமி, தா சீனிவாசன், புருசோத்தமன், லட்சுமணசாமி, கிருட்டிணசாமி அங்கமுத்து, குருசாமி, தாமோதரன் ஆகியோர்.

செல்லம்பட்டு

பல சரக்குக் கடைகளும், சிற்றுண்டி நிலையங்களும், ஜவுளிக் கடைகளும், சவ்வரிசி பேக்டரியும் மூடப்பட்டன; மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; வாடகை வண்டிகள் ஓடவில்லை; வெளியூர் வியாபாரிகள் வியாபாரத்தை நிறுத்தினர் தச்சர்கள். கொல்லர்கள், முடிதிருத்துவோர், துணி துவைப்போர் போன்ற தொழிலாளர்களும், வேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர்; உழவர் பெருமக்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள்.

காலையிலும் மாலையிலும் தோழர் ம நச்சியப்பன் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது மாலை 6-30 மணிக்கு மாரியம்மன் கோயில் திறந்தவெளியில், தோழர் பெ. துரைசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் இர வாசுதேவன் பேசினார் மக்கள் உறுதிமொழியை ஏற்றனர்.

குன்னத்தூர்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன; 2,000 ரூபாய்க்கு மேல் சுங்கம் வசூலாக வேண்டிய வாரச் சந்தையில் சுமார் ரூ. 200-தான் வசூலாயிற்று. மக்கள் சந்தைக்கு வராமல் அர்த்தாலை மேற்கொண்டனர். மாலை 5 மணிக்கு மாபெரும் ஊர்வலம் ஒன்று முக்கிய வீதி வழியாகச் சென்று 6-30 மணிக்கு பழைய சந்தைத் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர் செல்லப்பன் தலைமை வகித்தார். தோழர்கள் த. கா மா அ. சேரன் அ. மூவேந்தன், கே என் நடராசன், கு க. சுப்பிரமணியம், க. அன்பரசு ஆகியோர் பேசினர் என். டி. இராமசாமி உறுதி மொழியை வாசித்தார்; மக்கள் அதனை ஏற்றுக்கொண்டனர்.

பம்மல்

முழு அர்த்தால் மேற்கொள்ளப்பட்டது. நெசவுத் தொழிலாளர்கள் வேலைகளுக்குச் செல்லவில்லை; விவசாயிகளும் தங்கள் அறுவடைகளை எல்லாம் நிறுத்திவிட்டனர். ஓட்டல்களும், கடைகளும் மூடப்பட்டன; பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை; வெளியூர்களில் சென்று படிக்கும் மாணவர்களும் செல்லவில்லை; பஸ்கள் ஓடவில்லை அமைதியுடனும், கட்டுப்பாடுடனும் அர்த்தால் வெற்றிகரமாக நடந்தது. மாலை ஊர்வலமாகச் சென்று தமிழர் மன்றத்தை அடைந்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.

தேவிகுளம் - பீர்மேடு: விவாதிக்க வ.ஆ. மாவட்டக்கழக தனிக்கூட்டம்

"தேவிகுளம், பீர்மேடு, திருத்தணி, சித்தூர் முதலிய தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் சேர வேண்டுமென்றும், 'சென்னை இராஜ்யத்'திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்றும், 'தட்சிணப் பிரதேச' முயற்சியைக் கைவிட வேண்டுமென்றும், பிற மொழிப் பகுதிகளை அதனதன் மொழி வழங்கும் இராஜ்யங்களோடு சேர்க்க ஒரு எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்ய வேண்டுமென்று இந்தப் 'போர்டு' மாகாண சர்க்காரையும், மத்திய சர்க்காரையும் கேட்டுக்கொள்கிறது."

மேற்குறித்த அவசரத் தீர்மானத்தை, வட ஆற்காடு மாவட்ட ஆட்சிமன்றக் கூட்டத்திற்கு உறுப்பினர் ஏ. எல். சி. கிருட்ணசாமி, அதன் தலைவர் டி. பி. கேசவரெட்டியாருக்கு அனுப்பி இருந்தார்.

25—2—56-ல் வேலூரில் நடைபெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்தில் மேற்படி பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

'மேற்கண்ட தீர்மானங்களை தலைவர் அனுமதிக்கக்கூடாது' என்று இரண்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சேபனை கிளப்பினர்.

'இந்தப் பிரச்சினை அவசியமற்றது; அவசர தீர்மானமாக இதை ஏற்கக்கூடாது; மேலும் 'அஜண்டா'விலும் இல்லை' என்று அவர்கள் எதிர்த்தனர்.

38 உறுப்பினர்கள், 'இத்தீர்மானம் அவசரமான பிரச்சினைதான்; இதை விவாதிக்க வேண்டும்' என்று எழுத்து மூலம் எழுதிக் கொடுத்தனர்.

'பிரச்சினை அவசரமானதாக இருந்தாலும், விவாதிக்கப் போதிய நேரமில்லையே; வேண்டுமானால் அடுத்தக் கூட்டத்தில் (ஏப்ரல் மாதக் கூட்டம்) சேர்க்கிறேன்' என்று தலைவர் சமாதானம் கூறினார்.

தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி மற்றொரு திருத்தத்தைப் பிரேரேபித்தார்:—

"தேவிகுளம் - பீர்மேடு பிரச்சினை மிக அவசரமானது; அதை விவாதித்துத் தீர்மானங்களை நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்ப 'தனிக் கூட்டம்' ஒன்று கூட்ட வேண்டுமென்று தலைவரைக் கேட்டுக் கொள்கிறது."

தீர்மானத்தைத் தோழர் குப்புசாமி ஆமோதித்தார்; திருத்தத் தீர்மானம் 38 உறுப்பினர்களால் (வந்திருந்தவர்கள் 48 உறுப்பினர்கள்) ஒப்புக் கொள்ளப்பட்டு, தீர்மானம் நிறைவேறியது.

குறிப்பு:— தலைவர் தனிக் கூட்டம் கூட்டுவதற்கு, அவருக்கு 1/3 உறுப்பினர்களிடமிருந்து கையெழுத்துபோட்ட 'நோட்டீஸ்' கிடைக்கவேண்டும்; இது சட்டம் நோட்டீசின்றி கூட்டம் கூட்டுவதற்குத் தலைவருக்கு அதிகாரம் கிடையாது; எனவே 26 பேர் கையெழுத்திட்ட 'ஒரு அவசரக் கூட்டம் கூட்டுவதற்குக் குறுகிய கால நோட்டீஸ்' கொடுக்கப்பட்டது.

அந்த 26-ல், காங்கிரஸ் உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளார்கள்.

நோட்டீசை ஏற்றுக்கொண்டு, '14—3—55ல் வேலூர் மாவட்ட போர்டு கட்டிடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும்' என்று ரிஜிஸ்டர் தபாலில் எல்லா உறுப்பினர்களுக்கும் இன்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானங்கள் அவசரக் கூட்டத்தில் நிறைவேறும்.

இந்தப் பிரச்சினைக்காகத் தனிக் கூட்டமே கூட்டியிருப்பது வட ஆற்காடு மாவட்டந்தான் என்பது குறிப்பிடத் தக்கது.

பழவேற்காட்டில் 3,000 மீனவர்கள் வேலை நிறுத்தம்

ஓராசிரியர் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன

கடைகள் மூடப்பட்டன; மீனவர்கள் 3,000 பேர் மீன் பிடிக்கச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்தார்கள்; நெசவுத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். கூனன் குப்பம், அரங்கம் ஆகிய ஊர்களிலுள்ள ஓராசிரியர் பள்ளிகள் அனைத்தும் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லாத காரணத்தால் மூடப்பட்டன.

இளைஞர் முற்போக்குக் கழகம், நெசவுத் தொழிலாளர் சங்கம், தோணிரேவு, கூனன் குப்பம், நடுகுப்பம், லைடவுஸ் குப்பம், வைரவன் குப்பம் முப்பகுதி, சாத்தான் குப்பம் ஆகிய ஊர் மக்கள் அடங்கிய ஓர் மாபெரும் ஊர்வலம் மாலை 3 மணிக்கு பழவேற்காடு கடை வீதியில் ஆரம்பித்து கோட்டை குப்பத்தின் வழியாக பழவேற்காடு திரு. வி க. திடலை வந்து அடைந்தது. அங்கு மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. வி. குப்புசாமி தலைமை வகித்தார். தோழர்கள் மாணிக்கவேல்; இராமலிங்கம், சிவராஜ், அரங்கன், இரா. சு. சு. மணி, எஸ் இராதாகிருஷ்ணன் ஆகியோர் பேசினர். இறுதியில் உறுதிமொழி வாசிக்கப்பட்டு; கூட்டம் இனிது முடிந்தது.

நச்சாந்துபட்டி

ஓட்டல்கள், கடைகள், ரைஸ் மில்கள் பூரணமாய் அடைக்கப்பட்டிருந்தன—அமைதி நிலவியது

பாபிரெட்டிப்பட்டி

அமைதியான முறையில் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது மாலை சுமார் 4 மணியளவில் கட்டணித் தலைவர் தோழர் ராஜு, செயலாளர் தோழர் சி. இராமச்சந்திரன் ஆகிய இருவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். என்றாலும் பொது வேலைநிறுத்தம் அமைதியாகவே நடைபெற்றது.

அக்கிராயபாளையம்

பொது வேலைநிறுத்தம் பல எதிர்ப்புகளுடையிடையே வெற்றிகரமாக—அமைதியாக நடந்தது. போலீசாரால் கைது செய்யப்பட்ட தோழர்கள் மா. இராமசாமி ரா. ஆறுமுகம், எம் அனீபா, எ. காசிம், சி. இராமசாமி, பெருமான் ஆகியோர். இவர்களை இரவு 10 மணிக்கு விடுதலை செய்தனர். ஊரில் எங்கும் அமைதி நிலவியது.

* *

தலைமைக் கழகம்: அறிக்கை—5/56

உறுப்பினர் சேர்த்தல்

★

பொது வேலைநிறுத்தம் பற்றிய பணிகளில் கழகத் தோழர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டி நேர்ந்ததாலும், உறுபபினர் சேர்க்கும் காலம் மேலும் சிறிதளவு நீடிக்க வேண்டும என்று பல கிளைகள் விரும்பும் காரணத்தாலும் உறுப்பினர் சேர்க்கும் காலம் **18—3—56** வரையில் மட்டுமே நீடிக்கப்படுகிறது.

மார்ச்சுத் திங்கள் 12-ஆம் நாளிலிருந்து 18-ஆம் நாள் வரையில் உள்ள ஒரு வாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக்கொண்டு தகுதியுள்ள மிகவான உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபடும்படி கிளைக் கழகங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறோம்.

18—3—56-ஆம் நாளை உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகக்கொண்டு, 31-3-56-க்குள் உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்களைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படி கிளைக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர்க்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும், கிளைக் கழகம்—மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குச் சேரவேண்டிய உரிமைச் சீட்டுக்களும் மார்ச்சு 15-ஆம் நாளுக்குமேல் தொடர்ந்து தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்பெறும்.

'அறிவகம்'
29—2—56
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

* *

திருவண்ணாமலையில் காங்கிரஸ் தோழர்கள் முயற்சி பலிக்கவில்லை

சினிமாக் கொட்டகைகள் உட்பட எல்லா கடைகளும் அடைபட்டன

பத்தாயிரம் பேர் கொண்ட மாபெரும் ஊர்வலம்

பிப். 20 பொது வேலை நிறுத்தத்தை குலைப்பதற்கு, இங்குள்ள காங்கிரஸ் பிரமுகர்கள் எவ்வளவோ முயன்றும், அவர்களுடைய எண்ணம் பலிக்கவில்லை.

கடைகள், ஓட்டல்கள், சினிமாக் கொட்டகைகள் அனைத்தும் அடைபட்டுக்கிடந்தன.

பஸ்கள், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள், கைவண்டிகள் எதுவும் ஓடவில்லை.

அன்று பத்தாயிரம் பேர் கொண்ட மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது;

கைது செய்யப்பட்ட பென்னாத்தூர் தோழர்களுக்குத்தான் 'ரிமாண்டு' தரப்பட்டதே தவிர, தோழர் ப. உ. சண்முகத்திற்கு 'ரிமாண்டு' தரப்படவில்லை யென்றும், முன்பு வெளிவந்த செய்தி தவறு என்றும் தோழர் ப. உ. சண்முகம் தெரிவித்துள்ளார்.

தலைவராகிறார்!

லண்டன், பிப். 28—

ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி மத்தியக் கமிட்டிக்குப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு நிகிதா குருஷ்சேவ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாராம்.

ஆரஞ்சுப் பழரசத் தூள் தயாரிப்பதற்கு புதிய செய்முறையொன்று மைசூரில் உள்ள மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் தயாரிக்கப்படும் பழ ரசத்தூள்களில், 'சி' வைட்டமின் சேர்த்து வலுவூட்டி, இனிப்புள்ள ஆரஞ்சுப் பழ ரச பானங்களைத் தயாரிப்பதற்கு அவற்றைப் பயன்படுத்தலாம்.

வேலூர்-சேலத்தில் வெற்றிகரமான அர்த்தால்

இவ்வூரில் பொது வேலைநிறுத்தம் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. பெரிய கடைகள், சிறிய கடைகள், துணிக் கடைகள், மருந்துக் கடைகள் எல்லாம்—மொத்தம் 400 கடைகளும் மூடப்பட்டன.

இளைஞர் காங்கிரஸ்காரர்களின் 6 கடைகள் மட்டும் திறந்திருந்தன; வெற்றிலை வியாபாரிகள் வியாபாரம் செய்யவில்லை; விவசாயத் தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை; சினிமா நடைபெறவில்லை; பஸ்கள் 34-க்கு 10 பஸ் மட்டும் ஓடின; அதிலும் பொது மக்கள் பிரயாணம் செய்யவில்லை.

அன்று மாலை 5 மணிக்கு, சர்வ கட்சித் தலைவர் வி. ஏ இராமநாதன் தலைமையில் 1000-க்கு மேற்பட்ட மக்கள் கல்தான் பேட்டையிலிருந்து புறப்பட்டு, முக்கிய வீதிகளின் வழியாக வந்து, ஊர்வலம் முடியும் தருவாயில் வேலூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சாமி நாயுடு அவர்கள் திடீரென்று தோழர்கள் பலரைக் கைது செய்து பொது மக்களைக் கலைந்து போகும்படி கேட்டுக் கொண்டார். எல்லோரும் பொதுக் கூட்டம் நடக்கும் மைதானத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

தோழர்கள் வி. ஏ. இராமநாதன், பி. கருப்பண்ணன், வி. ஏ. இலக்குமணன், ஆர். இரத்தினசபாபதி, எம். கருப்பண்ணன், பி. முஸ்தபா, என். சையத்பீர், ஏ. மாரியப்பன், என். கணேசன், கருணாகரன், ஆர். பழனியப்பன், வி. மருதப்பன், பி. செங்காளி, பொன்னுசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டு, பரமத்தி சப்-ஜெயிலுக்கு பிப். 21-ந் தேதி பகல் 11 மணிக்கு லாரியில் ஏற்றிச் சென்றார்கள். மாஜிஸ்திரேட் அவர்களை 15 நாள் ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்; ஆனால், 27-ந் தேதி பகல் 12 மணிக்கு விடுதலை செய்துவிட்டனர். 'கூப்பிடும்பொழுது வரவேண்டும்' என்று தோழர்களிடம் கையொப்பம் வாங்கியுள்ளனர்.

20-ந் தேதியன்று, வேலூர் வ. உ. சி. திடலில், தோழர் எம். சுப்பராயன் அவர்கள் தலைமையில் உறுதிமொழிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் லோ. கருப்பையா, எஸ். ஏ. ஆறுமுகம், பரமசிவம், எஸ். மாரப்பன், டி. வேலுசாமி ஆகியோர் பேசியபின், உறுதிமொழி படிக்கப்பட்டு ஏற்கப்பட்டது.

இந்தியாவில், மொத்தம் 2.2 லட்சம் ஏக்கரா நிலத்தில் நூக்கிரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மோசடியையே தொழிலாக் கொண்ட இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள்

முதலீடு செய்வதில் பெரும் ஊழல்

பல லட்சம் ரூ. பெறுமான 'செக்யூரிட்டி' பத்திரங்கள் மறைந்த மாயம்

பணம் பட்டுவாடா செய்வதில் ஏமாற்று வித்தை

நிர்வாகச் செலவும் 'பிரீமியம்' வசூலும் மிகவும் அதிகம்

இந்திய நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் விளக்கம்

இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழில்—மோசடி, நாணயக் கேடு முதலியவற்றிலேயே கட்டப்பட்டிருப்பதாகக் காணப்பட்டிருக்கிறது.

உலகத்தில் வேறெந்த நாட்டிலும் உள்ள இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் போலன்றி, அந்த நிறுவனங்களின் உயர்ந்த நோக்கத்திற்கு இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழில் உகந்ததாக இருக்கவில்லை.

உலகில் வேறெங்கும் இல்லாத அளவு இங்கு 'இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம்' அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்பதுடன், தொழில் நிர்வாகச் செலவும் அளவுக்கு மீறியதாக உள்ளது.

இன்ஷ்யூர் செய்தவர் இறந்த பிறகு, அந்த நபர் செய்த இன்ஷ்யூர் பணத்தைத் தருவதில் நாணயமாக நடந்து கொள்வதில்லை; பல சந்தர்ப்பங்களில், வழக்கு மன்றங்கள் தீர்ப்பளித்த பின்பே இன்ஷ்யூர் தொகை தரப்படுகிறது.

இப்படிப்பட்ட பல கேடுகளுக்கு இலக்கான இன்ஷ்யூரன்ஸ் தொழிலைத்தான், காலங்கடந்தேனும் இந்தியப் பேரரசு, தங்கள் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்திருக்கிறது.

சர்க்கார் அந்தத் தொழிலை மேற்கொண்டது பற்றி டில்லி பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் பேசியவற்றிலிருந்து கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

"தொழிலை தேசிய மயமாக்குவது சர்க்காருக்குத் தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது; ஏனெனில், இந்தியாவில் ஒழுங்காக நடைபெறும் நிறுவனங்கள் மிகச் சிலதான்.

"தனியார் நடத்தும் இந்த இன்ஷ்யூரன்ஸ் தொழில் திறமையாகவோ, பொறுப்புணர்ச்சியுடனே நடைபெறவில்லை.

"முதலிலேயே சர்க்கார், இந்தத் தொழிலை மேற்கொள்ளுவதற்கான மசோதாவைக் கொண்டுவந்து பிறகு நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கலாம்; அவசரச் சட்டம் பிரகடனப்படுத்தி மேற்கொண்டிருக்க வேண்டாம்—என்று கூறப்படுகிறது. ஆனால் கடந்த 10 ஆண்டுக் கால அனுபவம், சர்க்கார் இம்மாதிரிச் செய்வதை சரியான வழி என்று கூறத்தக்கதாயில்லை.

"ஏனெனில், மசோதா கொண்டுவரப்பட்டு, சட்டமாகு முன்னர், அந்த நிறுவனங்கள், தங்களிடமுள்ள தொகைகளைச் சுருட்டிக் கொள்ளவும், ஏற்கனவே கையாடிய தொகைகளைச் சரிக்கட்டவும் வழிகிடைத்து விடுகிறது. எனவேதான், இந்தச் சீர்கேடுகளை அறிந்து கொள்வதற்குத்தான், திடீரென அவசரச் சட்டம் பிரகடனம் செய்து, தொழில் நிர்வாகத்தை சர்க்கார் மேற்கொண்டது.

"பம்பாயில் தலைமை அலுவலகம்கொண்ட இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் ஒன்றில் சர்க்கார் செக்யூரிட்டி பத்திரங்கள் ரூ. 30 இலட்சம் பெறுமானவை காணுமல் போயிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

"கல்கத்தாவில் இரண்டு நிறுவனங்களில் ஒவ்வொன்றிலும் ரூ. 15 இலட்சம் பெறுமான சர்க்கார் செக்யூரிட்டிகள் காணப்படவில்லை.

"உத்திரப் பிரதேசத்தில் ஒரு நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டர் ரூ. 12 இலட்சம் பெறுமான — கம்பெனிக்குச் சொந்தமான பத்திரங்களை எடுத்துத் தன்னிடம் வைத்திருப்பதாயும், இன்றும் அவருக்கு அந்தப் பத்திரங்களைத் திருப்பித் தரவேண்டும் என்ற எண்ணம் எழுந்ததாகத் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது.

"இந்த நிலையில் சர்க்கார், அவசரச் சட்டம் பிரகடனம் செய்திராவிட்டால், இந்தத் தொழிலதிபர்கள் இந்தத் தொகைகளைச் சரிக்கட்ட முயற்சித்திருக்கமாட்டார்களா?

"வேறு ஒரு நிறுவனம், கம்பெனிக்குச் சொந்தமான சர்க்கார் செக்யூரிடிப் பத்திரங்களை ஒரு இலட்சம் ரூபாய் பெறுமானவற்றை விற்று, அதற்கு ஒரு சிறிய நிலம்—விவசாயத்திற்குரியது — வாங்கியிருக்கின்றது.

"ஆனால் நிலம் விற்றவர் நிலத்திற்கு ஒருபோதும் எந்த வகையாலும் சொந்தக்காரராயிருக்கவில்லை என்றும், வாங்கப்பட்ட நிலம், கொடுக்கப்பட்ட பணத்தில் ஒரு சிறிய பங்குகூடப் பெறுது என்றும் தெரியவந்திருக்கிறது.

"மற்றும் ஒரு நிறுவனம் ரூ. 20 இலட்சம் பெறுமானமுள்ள சர்க்கார் செக்யூரிட்டிகளைப் பாங்கி ஒன்றில் பாதுகாப்பாக, 'டெபாசிட்' செய்திருப்பதாகக் கூறிற்று. சர்க்கார் அந்த நிறுவனத்தை மேற்கொண்டபோது, பாங்கியிலிருப்பதாகக் கூறப்பட்ட 'செக்யூரிடி'களைத் தேடியபோது அவை பாங்கியிலிருக்கவில்லை. பாங்கியிலிருப்பதற்கு அத்தாட்சியாகக் காட்டப்பட்ட 'பாங்கி சர்டிபிகேட்' வெறும் போலி என்பது தெரியவந்தது. பாங்கிக்காரர்கள் தாங்கள் ஒருபோதும் அந்த 'செக்யூரிடி' பத்திரங்களை வைத்திருந்ததில்லை என்று தெரிவித்துவிட்டனர்.

"சராசரி மனிதனின் சேமிப்புகளை ஈர்க்கிற அளவு, இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழில் திறம்பட வேலை செய்து வந்ததுண்டா; இல்லை என்றால் அதற்குக் காரணம் என்ன?

"இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழில், ஒரு நாகரீக நாட்டில் இன்ஷ்யூரன்ஸ் எப்படி இருக்க வேண்டும்' என்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அப்படி இருக்கவில்லை.

"இன்ஷ்யூர் செய்பவர்களுக்குக் கிடைக்கும் பிரீமியம் வருமானத்தோடு, இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழில் நிர்வாகத்திற்காக ஆகும் செலவு 27 சதவிகிதமாக இருக்கிறது. ஆனல் இங்கிலாந்தில் இது 15 சதவிகிதமாகவும், அமெரிக்காவில் 17 சதவிகிதமாகவும் இருக்கிறது.

'பிரீமியம்' என்பது உண்மையில் சேமிப்புத்தான்; ஆனல், ஒவ்வொரு ரூபாய் 'பிரீமியத்'திலும் 4 அணு செலவு கணக்குக் காட்டப்படுகிறது. 12 அணு மட்டுமே திரும்பத் தரப்படுகிறது என்றால், சிறு சேமிப்புக்காரர்களின் நலன்கள் எவ்வளவு பாதிக்கப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

"இந்தியாவில் மரண விகிதம் அதிகமாயிருப்பதற்காகத் 'தள்ளுபடி' தந்த பின்னரும் கூட, இந்தியாவில் வசூலிக்கப்படும் பிரீமியம் தொகை, வேறெந்த ஒரு முன்னேறிய நாட்டில் வசூலிக்கப்படுவதை விட மிக அதிகமாக இருப்பதை நாம் காண்கிறோம்.

"மேலும், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களில், முதலீடு செய்வதில் மன்னிக்கக் கூடாத, ஒழுக்கக்கேடான, நாணயக் குறைவான முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன.

"பாலிசிதாரர்களின் பணம் கண்ட கண்டபடி, தராதரம் பார்க்காமல் இஷ்டம்போல் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

"பிராவிடண்ட் சொசைட்டிகள் இந்த நூற்றுண்டுத் துவக்கத்தில், 500 இருந்தன; ஆனல் இப்போது அவை 71 ஆகக் குறைந்துவிட்டன. அநேகமாக எஞ்சிய எல்லாம், 'இன்சால்வெண்ட்' ஆகிவிட்டிருக்கின்றன.

"மேலும் பல இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் சட்ட ரீதியாகப் போராடி—நீதிமன்றங்கள் நிர்ப்பந்தித்தாலன்றி இன்ஷ்யூர் தொகைகளைத் தருவதில்லை. பல கம்பெனிகள், முறையாகத் தொகை தருவதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்திருக்கின்றன; தொகை தருவதைத் தவிர்க்க முயற்சித்திருக்கின்றன.

"1954-ம் ஆண்டில் மட்டும், 'பணம் தரப்படவில்லை—அல்லது காலந் தாழ்த்தப்படுகிறது' என்பதாகச் சுமார் 1,000 - புகார்கள் வரை சர்க்காருக்கு வந்தன. மிகப் பல சந்தர்ப்பங்களில் கம்பெனிகள் தவறிழைத்திருப்பது தெரிய வந்தது.

"ஆனல், ஆஸ்திரேலியாவில், 1954-ம் ஆண்டில் பணம் தரப்படவில்லை என்பதாக ஒரே ஒரு புகார் மட்டுமே வந்தது.

"உலகம் முழுவதும் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள் உண்டாக்கியிருக்கிற நல்ல மரபுக்கு ஒப்ப இந்திய இன்ஷ்யூரன்ஸ் தொழில் செயல்படவில்லை."

'சம்பள மறுப்பு'க் கிளர்ச்சி

குறைகளை நிவர்த்திக்க குமாஸ்தாக்கள் மேற்கொண்டுள்ள வழி

ஆயிரக்கணக்கானோர் சம்பளம் பெறவில்லை

சென்னை, மார்ச் 1—

ஆயிரக்கணக்கான குமாஸ்தாக்கள்—இந்திய இரயில்வே இலாகாவில் பணி புரிவோர், இன்று பிப்ரவரி மாதச் சம்பளம் பெற மறுத்துவிட்டிருக்கின்றனர்.

அகில இந்திய இரயில்வே இலாகா குமாஸ்தாக்கள் சங்கம், குறைகள் பல நிவர்த்திக்கப்படாமலேயே இருப்பதை எதிர்ப்பதற்காக மார்ச் 5-ந் தேதி வரை சம்பளம் பெறவேண்டாம் என்று தீர்மானித்ததை ஒட்டியே இந்தச் 'சம்பள மறுப்பு' கடைபிடிக்கப்படுகிறதாம்.

சென்னையில், சங்கத்தில் இடம் பெருதவர்கள் மட்டுமே சம்பளம் வாங்கிக்கொண்டதாயும்; இதரர்கள் சம்பளம் பெற மறுத்துவிட்டதாயும் தெரிய வருகிறது.

டெல்லியில் 6 000 பேர்; ஆஜ்மீரில் 6,000 பேர்; அலகாபாத்தில் 600 பேர்—இப்படி இந்தியா வெங்கணும் ஆயிரக்கணக்கானோர் இன்று தங்கள் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்திருக்கின்றனர்.

சிறப்புக் கூட்டம்

4—3—56 காலை 9 மணிக்கு திருச்சி தேவர் மன்றத்தில், தோழர் அ. பொன்னம்பலனுர் தலைமையில், தோழர் கண்ணதாசன் 'மொழி: நேற்று—இன்று—நாளை' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

29-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு:

"4—3—56 காலை 10 மணிக்கு 30-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் கழக நலனுக்காக சென்னை மாவட்டச் செயலாளர் முன்னிலையில் கூடவிருக்கின்ற அவசர செயற் குழுக் கூட்டத்திற்கு 29-வது வட்ட செயற் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவருமல் வருகைதர வேண்டுகிறேன்,"

என்று, 29-வது வட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் அ. பொ. அரசு அவர்கள் கேட்டுக் கொள்ளுகிறார்.

'சபாநாயகர்' யார்?

காலஞ் சென்ற மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கருக்குப் பதிலாக அந்த இடத்தில் யார் அமரப்போகிறார்கள்?

உதவித் தலைவராக இருக்கும் அனந்தசயனம் அய்யங்கார்—அடுத்த தேர்தலுக்குள் இரண்டே முறைகள்தான் சபைக் கூட்டம் நடைபெறும் என்பதால் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல் இப்போது தற்காப்பு இலாகா மந்திரியாயிருக்கும் டாக்டர் கே. என். கட்ஜூ அல்லது தொழிலாளர் மந்திரியாயிருந்து விலகிய வி. வி. கிரி ஆகிய இருவர் பெயரும் அந்தப் பதவிக்கு அடிபடுகிறதாகத் தெரிகிறது.

தென்னாட்டில் நிலக்கரி உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 1—

"தென்னாட்டில் நிலக்கரி உற்பத்தியை, நிலக்கரி சுரங்க முன்னேற்ற வேலையையும் மிகப் பெரும் அளவுக்கு அபிவிருத்தி செய்வது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் குறிக்கோள்,"

என்று, இயற்கை வள அமைச்சர் கே. டி. மாளவியா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

"ஐதராபாத்தில் நிலக்கரி வளப் பகுதிகளில் சுரங்க வேலை தீவிரமாக நடக்கும்; தற்போது தென்னாட்டில் நிலக்கரி குறைவான அளவில்தான் இருக்கிறது" என்றும் அவர் கூறினாராம்.

சிங்களக் கவிஞர்கள் தாடி வளர்ப்பராம்!

கொழும்பு, மார்ச் 1—

'இலங்கையின் அரசியல் மொழி சிங்களம் மட்டுமே' என்ற தன்னுடைய தேர்தல் வாக்குறுதியை ஆளும் கட்சியினர் (யு என். பி) நிறைவேற்றத் தவறினால், தென் இலங்கைவாழ் சிங்களக் கவிஞர்கள் தாடி வளர்ப்பதன் மூலம் தங்களின் எதிர்ப்பைத் தெரிவிப்பராம்!

திரு. வி. க. உயர்நிலைத் துவக்கப் பள்ளி ஆண்டு விழா

4—3—56 பிற்பகல் 3 மணிக்கு பணிக்கம்பட்டி திரு வி க. உயர் நிலைத் துவக்கப்பள்ளி 2-வது ஆண்டு விழா திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரி திரு ஜி வேதக்கண்ணு தலைமையில் நடைபெறும். 'கல்விக் கண்காட்சி'யை திரு. ம ரா. ரெங்கராசலு திறந்துவைப்பார். தோழியர் அருண்மொழி, தோழர் மீ. சு இளமுருகு—பொற்செல்வி, ஏ. ஆளவந்தார், பி. பொன்னம்பலக்கவுண்டர் எம்.எல்.ஏ., ஆர். கோவிந்தன், டாக்டர் வெங்கடாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். திரு. பி. எஸ். கலைமணியின் இசையும், மாணவ, மாணவிகளின் கும்மி, கோலாட்டம், நடனங்களும் உண்டு. இரவு 'ஊரும் வாழ்வும்' எனும் நாடகம் நடைபெறும்.

திருக்குறள் வகுப்பு

சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் 3—3—56 பிற்பகல் 2-30 மணிக்கு மேல் சென்னை முத்துக்கிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும், மயிலை-சிவமுத்து அவர்கள், 'கொடுங்கோன்மை' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

நகர இளைஞர் கழகம்—தூனை

4—3—56 காலை 9 மணிக்கு திரு. பி பாலகோபால் தலைமையில் சுகாதார ஊர்வலம் ஒன்று குமாரசாமிராஜபுரத்திற்குச் சென்று பணியாற்றும்; அவ்வமயம் பால் வழங்கப்படும்.

திருந்திய திருமணம்

4—3—56 காலை 9 மணிக்கு, பெங்களூர்—'லேபர் காலனி' அருகாமையிலுள்ள பிரமபுரம், ஏ-8 எண்ணுள்ள இல்லத்தில், திரு வி. ஆர். நாயுடு தலைமையில் தோழர் கு. சி துரைசாமி—தோழியர் விசாலட்சுமி சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர்கள் பி. ஜி. கோபால், மு. கேசவலு, ஏ. டி. பிரான்சிஸ், வீ முத்து, ப. செல்வராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.